Judicial Form No. 53
[See Rule 42]
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
.............

நீதித்துறை நடுவர் நீதிமன்றம், அரூர்

**வழக்கு எண். CC 129/2014**

வழக்கு சாட்சி எண். PW19

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சேட்டு | கிராமம் | : | ஆண்டியூர் |
| தந்தை பெயர் | : | சுப்ரமணி | தாலுக்கா | : | அரூர் |
| வயது | : | 52 | மாவட்டம் | : | தருமபுரி |

(எதிரி ஆஜர். ).

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **03rd** Day of **February 2026.**

**முதல் விசாரணை**

நான் சம்பவம் நடந்த சமயம் காவேரிப்பட்டினத்தில் வசித்து வந்தேன். தற்போது ஆண்டியூரில் வசித்துக்கொண்டு விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும்.

சுமார் 15 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் எங்கள் தோட்டத்திற்கும், எங்கள் ஊரின் சுடுகாட்டிற்கும் இடையில் கோட்டப்பட்டி சாலையில் விபத்து ஏற்பட்டது. அது தொடர்பாக போலீசார் என்னிடம் சாட்சி கையொப்பம் பெற்றார்கள். இன்று என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். பார்வை மகஜரில் உள்ள 1வது சாட்சி கையொப்பம் மட்டும் அசாஆ.1 ஆக குறியீடு

செய்யப்படுகிறது. வழக்கு தொடர்ந்த போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(மேற்படி சாட்சியை பிறழ்சாட்சியாக அனுமதிக்கக்கோரி அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் பிறழ்சாட்சியாக பாவித்து அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது).**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீஸ் விசாரணையில் கடந்த 26.09.2011ம் தேதி கோட்டப்பட்டி காவல் நிலைய போலீசார் இவ்வழக்கின் சம்பவ இடத்தை பார்வையிட்டு என் முன்னிலையில் படம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்தார்கள் என்றும், அந்த மகஜரில் நான் சம்பவ இடத்தில் சாட்சியாக கையொப்பம் இட்டேன் என்றும், போலீஸ் விசாரணையிலும், வாக்குமூலத்திலும் சொல்லிவிட்டு, தற்போது மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

**மறுவிசாரணை இல்லை.**

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர் அரூர்.**